# மில்க்வைற் செய்தி

# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ வைகாசி 1982 ★ இதழ் - 77


## மில்க்வைற் செய்தியின் சிறப்புப் பணி


**அகில உலக இந்து மாநாடு சம்பந்தமாக மில்க்வைற் செய்தி 76 சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. அதனைப் பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. தனிப்பட்டவர்கள் பலரும் நாளுக்கு நாள் பாராட்டிக் கடிதம் எழுதுகிறார்கள்.**

தமிழ், சைவம், விவசாயம், கைத்தொழில், சுகாதாரம், கடின உழைப்பு என்பன சம்பந்தமாக யார் எங்கே எப்போது விழா எடுக்கிறார்களோ அவர்களைப் பாராட்டி மில்க்வைற் செய்தி பூரித்துப் பெரிய இதழாக மலரும். மில்க்வைற் தொழிலதிபரின் வலக்கை நீளும். விளம்பரம் இல்லாதவகையில், செய்தி விற்பனைக்குக் கிடையாது.

மில்க்வைற் செய்தி முன்னர் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போதும், பின்னர் தெல்லிப்பழையில் நடைபெற்ற சைவசித்தாந்தப் பவள விழாவின்போதும், காசியில் நடைபெற்ற சைவசித்தாந்த விழாவின்போதும், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அகில உலக இந்து மாநாட்டின்போதும் சிறப்பிதழ்களாக வெளிவந்தன.

தமிழ் வளரவேண்டும் அதனோடு கூடிப்பிறந்த சைவம் வளரவேண்டும், உழவு வளரவேண்டும், தொழில் பெருக வேண்டும், சுத்தம் சுகாதாரம் நிலவவேண்டும், எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும், தர்மம் தழைக்க வேண்டும், அமைதி நிலவ வேண்டும். இவையே நாம் வேண்டுவனவாகும்.

மில்க்வைற் செய்தியின் விலை என்ன? வருட சந்தா எவ்வளவு? என்றெல்லாம் அன்பர்கள் எழுதுகிறார்கள். நாம் என் செய்வோம்? மில்க்வைற் விலைக்குக் கிடையாது. மில்க்வைற் சவர்க்கார மேலுறைகளுக்கே செய்தி பண்டமாற்றாகக் கிடைக்கும். பாடசாலைகள், சனசமூக நிலையங்களானால் வாருங்கள். இலவசம்! இலவசம்! ஆனால் நிபந்தனை ஒன்று. செய்தியை அனுப்புவதற்கு வேண்டிய முத்திரைகளைத் தாருங்கள். உங்கள் முகவரியை முறையாகப் பதிந்துகொள்ளுங்கள். செய்தி மாதந்தோறும் கிடைக்கும்.



அகில உலக இந்து மாநாட்டுப் பேராளர்கள் மில்க்வைற் தொழிலகத்திற்கு வருகைபுரிந்து காலை விருந்திற் கலந்து மகிழ்ந்தபின் தங்கள் சார்பில் நன்றி கூறுமாறு தமிழ் நாட்டுப் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்களை முன்னே நிறுத்தினார்கள். மூதறிஞர் மு. அ. பேசுகிறார்.

★ சேவை செய்பவன் வாழ்வில் வெற்றி பெறுகின்றான் ★

உ
சிவமயம்






### திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

**உள்ளத் திருக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்

நீற லைக்ததோர் மேனி நிமிர்சடை
ஆற லைக்கநின் றாடும் அமுதினைத்
தேற லைத்தெளி யைத்தெளி வாய்த்ததோர்
ஊற லைக்கண்டு கொண்டதெ னுள்ளமே.

திருச்சிற்றம்பலம்

திருநீறு நிரம்பப் பூசிய ஒப்பற்ற திருமேனியை உடையவரும், ஓங்கியுயர்ந்த சடையிலே கங்கையாறு அலைவீச நின்று ஆடும் அமுதம் போன்றவரும், தேனும் அதன் தெளிவும் அத்தெளிவு வாய்த்த ஊறல் போல் பவருமாகிய பெருமானை என் உள்ளம் கண்டு கொண் டது.

''நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதுஎன் னுள்ளத் திருந்தாய் போற்றி''




### விருந்தோம்பல்

விருந்தினரைப் பேணுதல்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

மனைவியுடன் வீட்டில் வாழ்ந்து பொருள்களைப் போற்றி இருப்பதெல்லாம், விருந்தாளிகளாக வீட்டுக்கு வந்தவர்களை எதிர்கொண்டழைத்து இனியவை கூறி அவர் களைப் பேணி அவர்களுக்கு உதவி செய்வதற்காகவே யாம்.

**Hospitality**

Acquiring wealth when living family life - domestic life, is to entertain, feed and help the guests.

## 1982 மே மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சனி | — | தொழிலாளர் தினம் |
| 3 | திங்கள் | — | ஏகாதசி விரதம் |
| 5 | புதன் | — | பிரதோஷ விரதம், உமாபதி சிவாசாரியர் குருபூசை |
| 7 | வெள்ளி | — | சித்திரா பூரணை |
| 13 | வியாழன் | — | யாழ். வில்லூன்றிப் பிள்ளையார் கொடி |
| 19 | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 20 | வியாழன் | — | பிரதோஷ விரதம், நல்லூர் சங்காபிடேகம் |
| 22 | சனி | — | அமாவாசை விரதம் |
| 27 | வியாழன் | — | கும்பழாவளை பிள்ளையார் கொடி சேக்கிழார் குருபூசை |

## பிழை திருத்தமும் மன்னிப்புக் கோருதலும்

மில்க்வைற் செய்தி எழுபத்தாறும் இதழில் குறிக்கப் பட்ட 27-3-82 தாபகர் தினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. அது மகேஸ்வர பூசையாயும் இருந்தது. எது எவ்வாறுயினும் அதனை முழுதாக முற்றுக முன்னின்று தங்கள் சொந்தப் பணச்செலவில் செய்தவர் கள் மில்க்வைற் தொழிலகத்தின் உழைக்கும் கரங்களான தொழிலாளச் சகோதரர்களே யாவர். இவர்கள் அயராது ஆயத்தஞ் செய்து நடத்திய விழாவின் புகழ் இவர்களுக்கே யாகும். தொழிலதிபர் இவ்விழாவில் விருந்தாளிகளுள் ஒருவராயிருந்தார்.

(இச் செய்தியை முந்திய இதழில் விளக்கக் குறைவாக எழுதியமைக்கு வருத்தப்படுகிறோம் மன்னிக்கவும். ஆசிரியர்)

**மில்க்வைற் செய்தி**

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள்.
நாங்கள் தபாற்செலவு கட்டி செய்தியை அனுப்புவோம்.
நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2
சலவைப் பவுடர் மேலுறை 2.
மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

★ அமைதியுள்ளவனுக்கு உலகமெல்லாம் சொந்தம் ★

## அறிந்துகொள்ளுங்கள் இந்துமதத்தில் அவர்கள் யாவர்? அவை யாவை?

1. சங்கரன் — சுகத்தைக் கொடுப்பவன்.
2. சம்பு — சுகம் உண்டாதற்கு இடமானவர்.
3. சுயம்பு — தானே உண்டானது.
4. பக்குவம் — மலபரிபாகம் பெறுதல்.
5. ஆக்கை — தத்துவங்களிலான உடம்பு.
6. தவசி — புறப்பற்றொழிந்த பெரியார்.
7. யோகி — அகப்பற்றொழிந்த பெரியார்.
8. துறந்தார் — இருவகைப் பற்றினையும் விட்டவர்.
9. அதிட்டானம் — மேலிடம்.
10. அதிசூக்குமம் — மிக நுண்ணியது.
11. அத்துவா — ஆன்மாவுக்குக் கன்மமேறும் வழி.
12. அநந்த சக்தி — அளவில் ஆற்றலுடைமை.
13. அநுக்கிரகம் — அருள்.
14. அபரஞானம் — குறைந்த ஞானம்.
15. அவத்தை — ஆன்மாவின் ஐவகை நிலைகள்.
16. ஆகந்துகம் — இடையில் வந்துகூடிய மலம்.
17. ஆன்மபோதம் — சுட்டியறியும் ஆன்ம அறிவு.
18. உபநிடதம் — வேதத்தின் உட்பொருள்.
19. கமண்டலம் — சந்நியாசியின் நீர்ப்பாத்திரம்.
20. கரும காண்டம் — கிரியைகளைக் கூறுவது.

அகில உலக இந்து மாநாட்டுக்கு வருகை புரிந்த பேராளர்கள், பிரதிநிதிகள், பெருமக்கள் என்னும் இத்திறத்தவர்களுள் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து குடாநாட்டின் பல பாகங்களையும் பார்த்துப் போயினர். அவர்கள் சென்ற 27-4-82 செவ்வாய்க்கிழமை காலை மில்க்வைற் தொழிலகத்திற்கு வருகை புரிந்தபோது தொழிலதிபரும் தொழிலாளரும் அவர்களுக்கு அன்புள்ளத்தோடு வரவேற்பு அறுசுவையோடு காலை விருந்தளித்துக் கௌரவித்தனர். விருந்தாளிகளுக்கு மில்க்வைற் வெளியீடுகள் பலவும் அன்பளிப்பாக வழங்கப்பெற்றன.

விருந்தாளிகளுள் திருக்கோயில் ஆசிரியர் முருகவேள் அவர்களும், சித்தாந்தஸ்ரீ ஆசிரியர் அருணாசலம் அவர்களும் இன்னும் ஒரு சிலரும் மில்க்வைற் தொழிலதிபரோடு தமிழ்நாட்டிலிருந்து காசிக்கு யாத்திரை செய்தபோது பலநாட்கள் உறவாடி நெருங்கிப்பழகியவர்கள். அவர்களை உள்ளிட்ட பெரியார்களைத் தம் திருஆலவாய் என்னும் மனையில் வரவேற்றுபசரித்தமை தமக்கு பெருமகிழ்ச்சி தந்தது என்று தொழிலதிபர் கூறிமகிழ்ந்தார்.

தமிழ்நாட்டவரும் ஈழநாட்டவரும் சென்றகாலத்தில் பழுதிலாச் சிறப்பிற் கொண்டும் கொடுத்தும் பண்பாட்டை வளர்த்த பாணியில் இனி எதிர்காலத்திலும் சிறப்பமையக் கொண்டு கொடுத்தும கூடிவாழ வேண்டும் என்று செய்தியாசிரியர் அவர்களை வரவேற்றார்.

பேராளர்கள் பலர் பேராசிரியர் மூ. அருணாசலம் அவர்களைப் பேசும்படி பணிப்ப அவர் மனமுவந்து மில்க்வைற் தொழிலதிபரின் தொண்டுகளைப் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

மூலிகை மர்மம்:




### சிறுகுறிஞ்சா

சிறுகுறிஞ்சான் எனவும் வழங்கும் இம்மூலிகை கொடியினத்தைச் சேர்ந்தது. இதன் இனமானது இன்னொன்று பெரிய இலைகளைச் சேர்ந்தது. அதிக பால் உள்ளது. இரண்டு கொடிகளும் நன்றாகப் பற்றிப்படரும் தன்மையுள்ளன.

சிறிய இலைகளையுடையதாகையால் சிறு குறிஞ்சா என வழங்கும் இம் மூலிகையைச் சித்தர்களும் வைத்தியர்களும் மெத்தப் புகழுகின்றனர். இப்பச்சிலைக்கு அயகம், ஆதிகம், ஆரியகம், ஆலியகம், கோகிலம், சகசா, சாரங்கம், சாலகம், சித்திரம் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன. சர்ப்பதருஷிக என்றும் மேஷசிறிங்கி என்றும் சமஸ்கிருதத்தில் பெயர்பெற்ற இதனைத் தெலுங்கில் பொதபத்திர, புத்லபொத்தர என்றெல்லாம் வழங்குவர். சோட்டா துத்திலடா என்று இந்துஸ்தானத்தில் வழங்குவர். சர்க்கரை கொல்லி என்று மறைமுகமாகத் தமிழர் இதனைக் கூறுவதால் நீரிழிவுக்காரருக்கு இது பெரிய ஔடதமாகும் என்று கூறாமலே விளங்கும்.

சிறுகுறிஞ்சாவின் இலைகளும் வேரும் பெரிதும் பயன்படுவனவாகும். இலைகள் அத்திசுரம், கடிவிடம், கபசுரம் சன்னிசுரம், வாதம் முதலியவற்றைப் போக்கும். பெண்களுக்கு மாதவிடாய்த் துன்பத்தைப் போக்கும். இலையை எண்ணெயில் வதக்கி நெறிகளில் கட்டினால் சுகம் உண்டாகும்.

**தெய்வ நம்பிக்கை உள்ளத் தூய்மையை உண்டாக்கும்**

சிறுகுறிஞ்சா இலக்கு சங்கோசனகாரி, ஜடராக்கினி வர்த்தனி, பலகாரி, சீதளகாரி என்றெல்லாம் குணங்கள் உள்ளன என்பர். பசியைத் தூண்டுதல், குளிர்ச்சியுண்டாக்குதல் இதன் மகிமை பெருமை என்பர். கசாயமிட்டுப் பருக இருமல் தணியும்.

சிறுகுறிஞ்சா வேர், கபகரகாரி என்பதால் கோழை யகற்றி எனப்படும். அது கபத்தைக் கண்டிக்கும். இன்னும் இருமல், காச சுவாசம், வாதசுரம், விடம் முதலியவற்றை நீக்கும். பாம்பு கடித்தால் இதனை உள்ளும் புறமும் உபயோகிப்பர். வேரைக் கசாயமாக்கிப் பருகியும், தூளாக்கிப் புண்ணிற் கட்டியும் பயன்பெறுவர்.

### வேரின் மகிமை

சிறுகுறிஞ்சா வேர்விடத்தைத் தீர்க்கும் அனிலத்
துறுசுரங்கள் வாதம் ஒழிக்கும் — தெறிபாணக்
கண்ணுய் இருமல்முதல் காசசுவாசந் தணிக்கும்
விண்ணு டருக்கிதனை விள்.

### இலை மகிமை

சிறுகுறிஞ்சா வாதமொடு சீதத்தை நீக்கும்
மறுவுதிரம் இல்லாத மாதர்க் — குறுமுலகில்
அத்தி சுரமும் அகலாக் கடிவிடமும்
தத்தியக லத்தகர்க்குந் தான்.

வாதசுரஞ் சந்நிசுரம் மாருக்க பச்சுரமும்
பூதலம்விட் டோடப் புரியுங்காண் — மாதேகேள்!
அக்கரங்கள் தீர்க்கும் அதிசுரந்தாகந் தொலைக்கும்
தக்க சிறு குறிஞ்சா தான்.

## மண் வாசனை

அகில உலக இந்து மாநாட்டுப் பேராளர்களை இணுவில் வாசரும் பிரபல வர்த்தகருமான சி. சின்னத்துரை அவர்கள் தமது கல்கி இல்லத்தில் சிறப்புடன் வரவேற்று மாலைச் சிற்றுண்டி வழங்கிக் கௌரவித்துப் பரிசுகள் கொடுத்து ஊர்வலமாக பரராசசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் சென்றார்.

மில்க்வைற் தொழிலதிபர், அண்ணு தொழிலதிபர், மல்ரி ஒயில் நிர்வாகத்தர் பாலசுப்பிரமணியம், பண்டித சபா ஆனந்தர், பேராசிரியர் வீரமணி ஐயர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முதலாக நூற்றுக்கணக்கானோர் குழுமிய கூட்டத்தில் பேராளர்கள் விநாயகப் பெருமானை வணங்கினார்கள். கோயிற் குருக்கள்மார் அவ்வேளை விசேட பூசை செய்து பிரசாதம் வழங்கினார்கள்.

பேராளர்களை வரவேற்றுப் பேசிய செய்தியாசிரியர் இணுவில் ஊரின் மண் வாசனையை அறிந்துகொள்ள வேண்டும் என்று பேராளர்கள் பேராசிரியர்கள் பெரியவர்களை வேண்டிக் கொண்டார். ஈழத்து இலக்கிய இலக்கண சைவப் பண்ணைகளுள் ஒன்றான இணுவில் பல துறைகளிலும் உபகரித்த பெருமையுள்ளது. இசைத் துறையில் மெத்தப் பிரகாசித்து வரும் இணுவில் கலைத்துறையிலும் மேம்பட்டுள்ளது. கரகம், காவடி, நடனம், நாடகம் எல்லாம் இணுவில் ஊரவர்க்குக் கைவந்த கலை.

சென்ற நூற்றூண்டின் பழுதிலாத்திறத்தைப் பேசுவதானல் இணுவில் வாசியாய அம்பிகை பாகர், தொல்காப்பியம் பதித்த சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்குப் பக்கத் துணையாயிருந்ததோடு, கச்சியப்ப முனிவர் செய்த தணிகைப் புராணத்துக்கும் அகலவுரை எழுதியவர். தணிகைப் புராணம் புலவர்களுக்கெல்லாம் இரும்புக் கடலையாயிருந்தது. அம்பிகைபாகரின் தொண்டினை அளவிடமுடியாது.

இணுவில் வாசியாய மற்றொரு வித்தகர் நடராச ஐயர். அவர் 100 ஆண்டுகளுக்கு முன் சிவஞானசித்தியாருக்கு ஞானப்பிரகாச முனிவர் எழுதிய நயவுரையை அச்சேற்றியவர். ஞானப்பிரகாச முனிவர் ஆறுமுகநாவலரின் முன்னோர் முந்நூறூண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்.

இவ்வாறெல்லாம் தமிழ்ப் பணி, சைவப் பணி புரிந்த ஈழநாட்டவர் தம் உபகரிப்புக்களை ஆயிரமாயிரம் பக்கங்களில் அருணசலம் அவர்கள் எழுதவேண்டும் என்று செய்தியாசிரியர் பேராசிரியர் மு. அருணசலம் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

பேராசிரியர் மு. அருணசலம் அவர்கள் ஒரு விவசாயி. அவர் 1946-ஆம் ஆண்டிலே உணவுப் பஞ்சம் என்னும் நூலை எழுதிப் பாரத நாட்டினர் விவசாயத்தில் ஈடுபட வேண்டிய வழி வகைகளைக் குறிப்பிட்டவர். காசிப் பல்கலைக்கழகத்திலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராயிருந்து ஓய்வு பெற்ற பின், ஆராய்ச்சித் துறையில் மிகவும் பிரகாசித்து நூற்றூண்டு இலக்கிய வரிசையைப் பல்லாயிரம் பக்கங்களில் எழுதி வருகின்றார்.

அருணசலம் அவர்கள் பேராளர்கள் சார்பில் பேசிய போது தணிகைப் புராணம் இரும்புக் கடலையாகவே இருந்தது என்றும், ஞானப்பிரகாச முனிவர் தொண்டும், அம்பிகைபாகர் தொண்டும் மகத்தானவை என்றும் பாராட்டினார்.

## வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் அவர்களின் நன்றியும், விண்ணப்பமும்

மில்க்வைற் தொழிலதிபர் இ. போ. ச. பஸ் வண்டிகளில் திருக்குறள் பலகைகளைப் பொருத்துவதற்கு உபகரித்தமையைப் பாராட்டிய தலைவர் திரு. சி. கனகரத்தினம் J.P., U.M அவர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்ததோடு, இன்னும் பல வண்டிகளில் பொருத்துவதற்கு 100 பலகைகள் கொடுத்துதவுமாறு மில்க்வைற் தொழிலதிபரைக் கேட்டுள்ளார். பலகைகள் விரைவில் வழங்கப் பெறும்.

கடவுள் உங்கள் உயிரின் உயிராக இருக்கிறார்; ஆனல் நீங்கள் அவரை உணர்வதில்லை. ஏனெனில் நீங்கள் உங்கள் இருதயக் கதவுகளை மூடி, எண்ணமுடியாத ஆசைகளாலும் வாஞ்சைகளாலும் பலப்படுத்தி விட்டீர்கள்.

— சுவாமி சிவானந்தர்

## பின்பக்கமாக நடத்தல்

உரும்பராயில் தில்லையர் என்பவர் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பின்னுகத் தினமும் உரும்பராயிலிருந்து அயல் ஊர்களுக்கு பின் பக்கமாக நடந்து மீள்பவர். இங்ஙனம் நடந்து உலக சாதனையொன்றை உண்டாக்கியவர் அமெரிக்க நாட்டு ரெக்சாஸ் மாநிலத்தவரான விக்கோ என்பவராவர். இவர் 1931—1932 ஆண்டுக் காலத்தில் 80,000 மைல் நடந்தாராம். கோயம்புத்தூரைச் சேர்ந்த பார்த்தசாரதி என்பவர் பலவித சாதனைகளோடு பின்னேக்கி ஓடுவதிலும் தீரன் என்பர்.

## கன்ன மீசைக் கடவுள்

இற்றைக்கு 1940 ஆண்டுகளுக்கு முன் உரோமாபுரியில் பேரரசராயிருந்த கலுகுலா என்பவர் தங்கத்தால் மெல்லிய நூல் செய்து தன் கன்னத்தில் அணிந்து தானே கடவுள் எனக்கூறித் தன்னை வணங்குமாறும் பணித்தார் என்பர்.

## தமிழில் வழங்கும் ஆங்கிலச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்கவுண்டன்ற் | — | Accountant |
| 2. | ஒன்டி மான்ட் | — | On demand |
| 3. | அப்பிளிகேசன் | — | Application |
| 4. | அப்பீல் | — | Appeal |
| 5. | அரோட்டுமா | — | Arrowroot flour |
| 6. | அலுமினியம் | — | Aluminium |
| 7. | அவுன்ஸ் | — | Ounce |
| 8. | அக்ரிங் | — | Acting |
| 9. | அசிட் | — | Acid |
| 10. | ஆசுபத்திரி | — | Hospital |
| 11. | ஓடிற்றர் | — | Auditor |
| 12. | ஒப்பரேசன் | — | Operation |
| 13. | அப்பிள் | — | Apple |
| 14. | ஓடர் | — | Order |
| 15. | ஹோல் | — | Hall |
| 16. | இன்ச் | — | Inch |
| 17. | எஞ்ஜினியர் | — | Engineer |
| 18. | இன்ஸ்பெக்டர் | — | Inspector |

## புத்தகப் புதினம்

### தாகூரின் இலக்கியம்

நொபல் பரிசு பெற்ற இலக்கிய கர்த்தாக்கள் 1958 ஆம் ஆண்டு வரையில் 52 பேர் என்பர். இவர்களுள் ஐரோப்பியரல்லாத ஒரு புலவர் இரவீந்திரநாத் தாகூர் என்பதில் ஆசியாக் கண்டத்தவர் அனைவரும் பெருமையடைதல் தகும். ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ஜேமன்காரர், இத்தாலியர், போலீஸ்காரர், ரஷ்யர், ஸ்கான்டிநேவியர், ஸ்பானியர் என ஐரோப்பியர் பெற்று வந்த மகத்தான பெரிய பரிசைத் தாகூர் 1913 ஆம் ஆண்டில் பெற்றார்.



## சேக்கிழார் சுவாமிகள்

தமிழ் மொழியும், சைவ சமயமும், சித்தாந்த வாழ்வும் சிறந்துயர்ந்த பொற்காலத்தில் எழுந்த காப்பியங்களுள் தலையாயது திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணமாகும்.

பெரியபுராணம் மாக்கதை என்றும் பெயர்பெற்றுள்ளது, அது பன்னிரண்டாம் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. அது தண்டமிழின் மேலாந்தரத்தின் அமைந்தது.

சேக்கிழார் குடிப்பிறந்த அருண்மொழித்தேவருக்கு அருண்மொழித்தேவர் என்னும் திருநாமமும், உத்தம சோழப்பல்லவன், தொண்டர் சீர்பரவுவார் என்னும் பட்டங்களும் இருப்பவும் அவர் தமது குடிப்பெயராய் சேக்கிழார் என்னும் பெயராலேயே பெரிதும் வழங்குகிறார்.

சாதியிலும் சமயமே பெரிது என்னும் சைவக்கோட்பாட்டை அழுத்தமாகக் கூறுவது பெரியபுராணம். உண்மை அடியார்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு இல்லை எனக்கூறுவது பெரியபுராணம்.

தேவாரம் முதலாகவுள்ள திருமுறைகளை நிறைவு செய்வது பெரியபுராணம். திராவிட வேதம் ஓதும்போது பாடப்பெறும் பஞ்சபுராணங்களுள் பெரியபுராணப்பாடல் இறுதியில் பாடப்பெறும் சிறப்புப்பெற்றது.

பெரியபுராணம் சமயச்சிறப்பும் இலக்கியச்சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற பெரிய நூல். அது கலைக்களஞ்சியமாகவும் கலைப்பெட்டகமாகவும் மனிதகுலத்திற்கு ஒரு வழிகாட்டியாயும் உள்ளது.

சேக்கிழாரின் பண்பட்ட உள்ளம் தெய்வபக்தி என்ற அடிப்படை உணர்வில் மற்றெல்லா உணர்வுகளையும் குழைத்து, வரலாறுகிய வண்ண ஓவியத்தைத் தீட்டுகிறது.

★ வெறுப்புணர்ச்சி வேற்றுமையை வளர்க்கிறது ★

அருங்கலைகளினுென்ருன ஓவியத்தைச் சேக்கிழார் பல வகையான அலங்காரங்கள் ஒப்பனைகளில் அமைத்துக் கூறுவர். பெண்ணை அலங்கரித்தல், இல்லத்தை அலங் கரித்தல், ஊரை அலங்கரித்தல் என்பன அழகுக் கலை களின் விளக்கமாகும்.

பரவையாரைக் கற்பகத்தின் பூங்கொம்பு என்றும், சுந்தரரை முன்னேவந்தெதிர் தோன்றும் முருகன், என் றும், மானக்கஞ்சாறனுர் மகளின் கூந்தலை மஞ்சுதழைத்த தென வளர்ந்த மலர்க்கூந்தல் என்றும் அழகாகக்கூறுவர்.

கலைகளிலொன்ருன சமையற் கலையைப்பற்றிச் சேக்கி ழார் கூறுவன பெண்களுக்கே பெருவிருந்தாகும். அவர் கீரைக்கறி முதல் பெருங்கறி வகைகளின் சமையலையும் கூறுவர்.

ஒழுக்கம் என்பது மானுட வாழ்வுக்கு இன்றியமை யாதது. அது சிவ ஒழுக்கம், சிவதன்மம், அது மெல் வினை, வல்வினை என இருவகைப்படும். மெல்வினை என் பது உலகத்தார் எல்லோரும் செய்யத்தக்க இறைவழிபாடு, அடியார் தொண்டு. வல்வினை என்பது செயற்கரிய அற வொழுக்கம், அது செய்தவர்களே சிறுத்தொண்டர், கண்ணப்பர், இயற்பகையார் முதலியோராவர்,

சேக்கிழார் சைவசித்தாந்தப் பெருஞ்செல்வர். அவ ரின் பக்தி ஞான அநுபவங்கள் அவரின் பாடல்களில் தெளிவாகத் தொனிக்கின்றன.

சேக்கிழார் கலையார்வமும் கலைத்திறனும் மிக்க கலைக் கஞரைர். அவரின் கலைப்புலமை ஆன்மீகத்திலேயே அதிக நாட்டங்கொண்டிருந்தது.

சேக்கிழார் அழகியற் கலைகளையும் அமைவாகக் கூறி யுள்ளார். அவர் கலைக்கென்றே எடுத்த பெருங்கோயில் பெரியபுராணம்.

பெரியபுராணத்தினுள் நுண்கலைகளினூடே தமிழரின் உள்ளம், உணர்வு, சமயம், பண்பாடு, நாகரிகம் முதலி யவற்றை நன்குணரலாம்.

தமிழர் வாழ்வில் சமயமும் கலையும் நெருங்கிய சம் பந்தம் பெற்றவை. சிந்தனையை மலர்விக்கும் தனியாற்றல் சமயத்துக்கும் கலைக்கும் உண்டென்ப.

தமிழர் வாழ்விலமைந்த அழகு சமயத்திலும் அமைந் தது. தமிழர் சமயத்தில் அமைந்த அழகின் வெளிப்பாடே கோயிலும் பூசனையுமாக மலர்ந்தன.

தமிழர் கட்டிய பெரிய கோயில்கள் கலைத்தெய்வம் களி நடம் புரியும் அமைப்புக்கள். அங்கெல்லாம் அழகினை உயர்த்திய சேக்கிழார் தெய்வநலப் பொலிவைக்காட்டு கிருர்.

பிற்காலச் சோழர் என்னும் பெருமதிப்புக்குரிய பேரரசர்கள் பீடுபெற்றெழுந்து பெரும்பணி செய்த காலத்தெழுந்த காப்பியங்கள், புராணங்கள், இலக்கியங் கள் மிகப்பல, இலக்கண உரைகளும் எழுந்த காலமும் அதுவேயாகும்.

இத்தகைய பொற்காலத்தின் பொலிவுக்குப் பெருங் கோயில்களும் எழுந்தன. கோயில்களில் பெருவிழாக்கள் நடைபெற்றன. சைவசமயம் வீறுகொண்டெழுந்த காலத் தில் சோழ மன்னர்களும் பெருமை பெற்றுயர்ந்தனர். சோழர்களின் வெற்றிப் பிரபாவங்களை ஒட்டக்கூத்தர் உலாக்களிலும் பிள்ளைத்தமிழிலும், செயங்கொண்டார் பரணியிலும் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

சோழப்பெருமன்னனுய இரண்டாம் குலோத்துங்கன் தில்லையில் சிவபெருமானுக்குப் பெருந்திருப்பணிகள் செய் தமை போதா வென்றுதன் முதன் மந்திரியாராய சேக் கிழாரைக் கொண்டு திருத்தொண்டர் பெருமையைப் பாடுவித்து அதனைப் பன்னிரண்டாந் திருமுறையாகத் தொகுத்து அது புறம்போகாது செப்பேடு கட்டுவித்தான்

தெய்வத்தைப் போற்றிய இருபத்தாறு பெரியவர் களின் பதினுெரு திருமுறைகளோடு, தெய்வத்தொண்டு புரிந்த தெய்வாம்சம் பெற்ற நாயன்மார்களைப் போற்றிய சேக்கிழாரின் பெரியபுராணம் பதினுராந் திருமுறைக்கு அடுத்ததாகப் பன்னிரண்டாந் திருமுறையானது. சேக் கிழாரும் தொண்டர் சீர்பரவுவார் என்னும் மேன்மையும் சிறப்பும் பெற்ருர்.

## விருந்துக்குமேல் விருந்து

தமிழர் வடக்கே வாழ்ந்தால் என்ன, தெற்கே வாழ்ந் தால் என்ன, அவர்தம் இரத்தத்தோடு ஊறிய பண் பாட்டில் விருந்துபசாரமும் ஒன்று. திருவள்ளுவர், இளங் கோவடிகள், கம்பர் முதலாய புலவர்பெருமக்கள் விருந் தின் பெருமையை விளக்கிப் பாடியுள்ளார்கள். விருந்து பசாரஞ் செய்யும்போது இல்லத்தரசியும் ஒத்தாசையா யிருத்தலே விருந்தின் சிறப்புக்கு ஏற்றம்.

## வர்த்தகர் சுப்பிரமணியம்

சென்னை வேலவர் பழைய காட் கொம்பனியைச் சேர்ந்த T. S. சுப்பிரமணியம் என்பார் பெரிய வர்த்தகர். மயி லாப்பூரில் தம்மனையில் மனைவிமக்கள், மருமக்கள் பேரப் பிள்ளைகள் மத்தியில் மில்க்வைற் தொழிலதிபருக்கும் அவர் தம் நண்பர்களுக்கும் விடாப்பிடியாகக் காலை விருந்து பெருந் தடபுடலாகச் செய்தார்; ''அப்பப்ப நீங்கள் எங் களுக்கு யாழ்ப்பாணத்தில் செய்த உபசரிப்பில் பத்தி லொன்று நாம் செய்யவில்லையே'' என்று பேசிப் பேசிப் பெரிய உபசரிப்புச் செய்தார். காசியாத்திரையிற் கலந்து கொண்ட தமிழ்நாட்டன்பர்களுள் கலகலப்பாகப் பேசிக் கொண்டே வந்தவர்களுள் சுப்பிரமணியம் அவர்களும் ஒருவர்; இவர் இலங்கையில் பல்லாண்டு வாழ்ந்து பலரு டன் அன்புநேசத்தோடு பழகிய பண்பாளர். வாழ்க இவர் மனையறம்!

## சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தலைவர் பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை

சிதம்பரத்தைச் சேர்ந்த பெரிய பெருமாள்பிள்ளை அவர்களின் மைந்தராய இவர், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று சமஸ்கிருத எம். ஏ. பட்டமும் பெற் றுப் பெரியவர்கள் வழிகாட்ட ஆராய்ச்சிகள் செய்து சென்னையில் பேராசிரியராய் இருந்தவர். அன்றி கீழ்த்திசை ஏட்டுச்சுவடி நிலையக் காப்பாளராயும் இருந்தவர். திருவை யாறு அரசர் கல்லூரி முதல்வராயும், கல்லூரிகளின் கண்

காணிப்பாளாராயும் துணை இயக்குநராயும் இருந்தவர். ஓய்வுபெற்ற பின் சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளராய் இருந்தபின், சமஸ்கிருதப் பிரிவின் இயக்குநராயிருப்பவர்.

கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற் பங்குபற்றிச் சிறப்பித்த இவர் எழுதிய நூல்கள் பல. வடமொழி இலக்கியச் சோலை, மாதவாசாரியரின் சைவதரிசனம், காஷ்மீர் சைவம், இந்திய எழிற்கலை, உமாபதி சிவாசாரியரின் சதரத்தினசங்கிரக ஆங்கிலமொழி பெயர்ப்பு, பிரத்ய பிஜ்ஞாஹ்ருதயம் தமிழாக்கம் என்பனவும் பிறவும் இவரின் ஆராய்ச்சித் திறனையும் மொழி பெயர்ப்பாற்றலையும் குறிக்கும். மும்மொழிக் கொண்டல் எனத் திருப்பனந்தாள் மடாதிபதி அவர்களாற் பாராட்டப் பெற்ற இவர் அண்ணாமலை, சென்னை தவிர, காசி, அலகபாத் பல்கலைக்கழகங்களிலும் சைவ சித்தாந்தம் பேசிய பெரியவர்.

சைவப்பெரியார் திருஞானசம்பந்தம் தம் மனையில் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் கை கொடுக்க மில்க்வைற் தொழிலதிபருக்கு மதிய விருந்தளித்துப் பெருமைப்படுத்தினர்.

## C. N. சிங்காரவேலனார்

மும்மொழிப் புலமையும் சைவப்பற்றும் மிகுந்த பெரியார் சிங்காரவேலனார், தமிழ்நாட்டின் உத்தியோக மொழியலுவலகத்தில் பெரும் பதவி வகித்தவர். மொழி பெயர்ப்புத்துறையில் பெரும் பாண்டித்தியம் பெற்றவர். தமது M. A. என்னும் முதுமானிப்பட்டத்தை மாநிலத்தில் முதலாளாகப் பெற்ற தகுதிவாய்ந்தவர். சைவசித்தாந்த சமாஜத்தோடு மிக நெருங்கிய தொடர்புகொண்ட சேவையாளர். தம்மில்லத்துக்குச் சிவமணம் எனவே பெயரிட்டு வாழ்பவர்.

மனவாசகங் கடந்தார் அருளிய உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த சாத்திர நூலைச் சுவையும் மணமுங் கெடாமல் ஆங்கிலத்தில் திறமையாக மொழி பெயர்த்து வெளியிட்டு எமக்கெல்லோருக்கும் அன்பளிப்புத் தந்ததோடு பலமுறை விருந்தும் தேனீரும் தந்து கௌரவித்தவர்.

உண்மை விளக்கத்தை Light on Reality என்று மொழி பெயர்த்த அருமையும் அதனைத் தமது பெற்றோருக்குக் காணிக்கையாகப்படைத்த பண்பாடும் பாராட்டற்பாலன.

சைவ சித்தாந்தம் உலகமெலாம் பரவி வருகின்ற வேளையில் சிங்காரவேலனாரின் உபகரிப்பு ஆங்கிலம் வல்லாரால் உவந்தேற்கப் பெறுவதொன்றாகும். இவரின் சித்தாந்தத் திறமையை மலேசிய நாட்டன்பர்கள் நன்கறிவர். வாழ்க இவர்! வளர்க இவர் பணி!

## நடேசனார்

சிதம்பரத்தில் நடேசனும், நடேசனில் சிதம்பரமும் என்பர். சிதம்பரத்தில் நடேசன் ஆடுவதால் அகில உலகமும் ஏன் அண்டங்களும் ஆடுகின்றன. அவன் ஆடாவிட்டால் எங்கள் ஆட்டங்களும் ஒய்ந்துவிடும். ஆடிப் பாடி வேலை செய்பவர்களுக்கு அதிக ஆற்றல் உண்டு. சைவப்பெரியார் பெ. திருஞானசம்பந்தம்பிள்ளையின் மருகர் நடேசனார் சிதம்பரத்தில் காணி பூமி மிகவும் அதிகமுள்ளவர். ஊக்கமுள்ள விவசாயி, விவசாயத்துறையில் அநுபவம் மிக்கவர்.


மில்க்வைற் தொழிலதிபர், அண்ணா தொழிலதிபர் முதலானோர் காசி, டெல்கி எங்கும் பிரயாணஞ் செய்த போது பக்கபலமாக உடனிருந்து எல்லா உதவிகளையும் செய்த இளைஞர்களுள் நடேசன் அடக்கமானவர். எமக்கு வேண்டியவற்றைக் காண்பித்து வாங்க வேண்டியவற்றை வாங்கித்தந்தவர் அவர். அவரின் சேவை மனப்பான்மை பெரிது. நாங்கள் தமிழ் நாட்டை விட்டு விமானத்தில் புறப்பட்டபோது வழியனுப்பவந்திருந்த நடேசனார் கண் கலங்கிச் சோகமே உருவாய் நின்றார்.

## முருகு இராமலிங்கம்

நடேசனாரின் மைத்துனர் முருகு இராமலிங்கம் என்பவர் துடிப்புள்ள இளைஞர், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி கோடம்பாக்கக்கிளை மேலாளராகப் பணிபுரிபவர். வடநாட்டு யாத்திரையின் போது எமக்கெல்லாம் வழி காட்டியாய் வசதிகள் செய்வதில் தம் சகோதரனுருடன் அயராது உழைத்தவர்.

## றெக்ஸ் வர்த்தகர்கள்

மாமன் மருமக்கள் பிரபல வர்த்தகர்கள். மில்க்வைற் தொழிலதிபர் அவர்களின் உள்வீட்டுப்பிள்ளை. ஐயா வாருங்கள்! அம்மா வாருங்கள் என்று திருவாளர் திருவாட்டி பேர்ணுந்தோ அவர்கள் வரவேற்கும் அன்புக்குரல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வள்ளுவர் வாசுகி ஒலித்த குரலின் பதிவுகளேதான். சுற்றிச் சுற்றி வந்து ஐயா வாருங்கள் என்று அழைத்துச் சென்று விருந்துபசாரம் செய்வதோடு நாட்கணக்காகத் தங்கள் மோட்டார் வண்டியையும் சாரதியையும் தந்துதவும் தாராள மனம் படைத்த தம்பதிகள் அவர்கள்.



இ. போ. ச. பஸ் வண்டிகளில் மில்க்வைற் தொழிலதிபர் திருக்குறள் ஒளிவிடச்செய்த வேளையில், தலைவர் திரு. சி. கனகரத்தினம் அவர்கள் திருக்குறட் பலகைகளைப் பொருத்துகிறார்.

**★ பற்று, பயம், சினம் அற்ற மனம் சிரிய மனம் ★**

## விருந்துபசாரத்தில் கனிவான போட்டி

மில்க்வைற் தொழிலதிபரும் அவருடன் யாத்திரை செய்தவர்களும் டெல்கியில் தங்கியுள்ளார்களாம் எனக் கேட்டறிந்ததும் பெரியார் மூவர் புத்தகங்களோடு விடுதிக்கு வந்து சேர்ந்தார்கள். அன்று நல்ல மழையும் விடாமற் பெய்துகொண்டிருந்தது.

டெல்கிப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் அவர்களும் அவரின் துணைவளம் நிரம்பிய பாரியாரும் கல்லூரி யதிபருமான அம்மையாரும், டெல்கி நூலகர் சுப்பிரமணியம் அவர்களும் உருக்கமாகப் பேசிக்கொண்டிருந்தனர். இவ்வேளையில் எங்கிருந்தோ லண்டன் கனகசூரியன் அவர்களும் அங்கே வந்துசேர்ந்தார்.

டெல்கியிலுள்ள மிகப்பெரிய உணவுச்சாலையில் இன்னிசை அனுங்க நீண்டநேர இராப்போசன விருந்து நடைபெற்றது. லண்டனுக்கும் டெல்கிக்கும் இடையில் நடைபெற்ற ஒட்டப்பந்தயத்தில் லண்டன் வெற்றியீட்டியது. நாங்கள் அழைத்து வந்தவிடத்து நீங்கள் செலவு செய்தீர்களே என்று டெல்கித் தமிழர் குழைந்தனர்.

### வர்த்தகர்
## அருணாசலம் அவர்கள் விருந்து

சென்னையில் பிரபலவர்த்தகர் அருணாசலம் அவர்கள் படிப்பாளியாய் வர்த்தகத்தில் ஈடுபட்டவர். அவருக்கும் மில்க்வைற் தொழிலதிபருக்கும் நீண்டகாலத்தொடர்பு. உணர்ச்சி தான் நட்பாங்கிழமை தரும் என்பதற்கமைய இருவரும் நண்பர்களாயினர்.

தமிழ்நாட்டில் சென்றிறங்க வேண்டியதுதான் அருணாசலம் அவர்கள் ஆவலோடு வந்துநின்று வரவேற்று, வண்டி வாகன உதவிபுரிந்து விமரிசையாக விருந்தும் செய்தல் வழக்கம். ஒருமுறையல்ல இருமுறையல்ல எத்தனைமுறை அங்குப்போனாலும் அவர் அன்புகனிய வரவேற்பதில் முன்னிற்பது வழக்கம்.



## சேலத்தில் சிவானந்தரின் ஒளி

தமிழ் நாட்டில் சேலம் மாவட்டம் தனிப்பெருமை வாய்ந்தது. தமிழ், சைவம், சேவை மனப்பான்மை, விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய பலதுறைகளில் மேம்பட்ட மாவட்டத்தின் சுற்றுடல், சூழல், சுகாதியம் என்பனவும் மனத்துக்கிதமானவை. படித்தவர்கள் பெரியவர்கள் இசைத்துறை கலைத்துறை வல்லார் வாழும் புகழ்பெற்ற சேலத்தில் இராசிபுரம் தபோதனருக்குரிய இடம்.

இராசிபுரத்தில் சிவானந்த சுவாமிகளின் திருநாமத்தால் ஒரு மண்டபம். அம்மண்டபத்தை மையமாகக் கொண்டு மிகுந்த அமைதியோடும் புன்முறுவலோடும் உற்சாகத்தோடும் தொண்டுபுரியும் ஒருவர், உள்ளத்தில் துறவு மேற்கொண்டுள்ளபோதிலும் உடலில் காவிகொள்ளவில்லை. பணி செய்வதில் ஓய்வு எடுப்பதில்லை.

சிவானந்தருடைய அருள்வாக்குக்களை ஆங்கிலத்திலிருந்து அருமையாக தென் தமிழில் தேன்சொட்ட மொழிபெயர்த்து, மாதாந்தம் சிறிய நூல்வடிவில் வெளியீட்டு வரும் திரு. சந்திரசேகரன் அவர்களின் சீரிய பணியை நேரிற்கண்ட மில்க்வைற் தொழிலதிபர் வியப்பில் மூழ்கியதில் வியப்பில்லை. சந்திரசேகரன் அவர்கள் ஆச்சிரமமும் அச்சுக்கூடமும் பிள்ளைகளை, மனிதராக்குவதும் சத்சங்கம் கூட்டுவதும் இன்னபிறவும் நியதியாகக்கொண்டு பணிபுரிகிறார். வாழ்க இவர், வளர்க இவர் பணி.

## உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. ஒரு பைந் நீரின் நிறை.
2. அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி.
3. பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுருக்கம்.
4. அஸ்பிரின், நைலோன் இவற்றின் மூலம்.
5. டோவர் நீரிணை இணைக்குங் கடல்கள்.
6. சதுரங்கப் பலகையின் சதுரங்களின் எண்ணிக்கை.
7. முட்டை, உருளைக்கிழங்கு முதலில் அவிவது.
8. லண்டனில் புகழ்பெற்ற கிறிக்கற் மைதானம்.
9. ஈரூக் நாட்டின் பழைய பெயர்.
10. ஈரூக்கின் பழங்குடி மக்கள்.
11. கொக்கோ, உருளைக்கிழங்கு முதலில் உண்டான நாடு.
12. மனோதத்துவ நிபுணன் எனப் புகழ்பெற்றவர்.
13. வேட்டை நாய், நரி வேகமாக ஓடவல்லது.
14. கலிக்கோ, மஸ்லின், இவற்றின் மூலம்.
15. சற்றின், வெல்வெற் இவற்றின் மூலம்.
16. பிளானல், ருவீட் இவற்றின் மூலம்.
17. கரண்டி வகைகளிற் பெரியது.
18. கரண்டி வகைகளிற் சிறியது.
19. வினாகிரி, உப்பு, சீனி இவற்றின் உபயோகம்.
20. தவளையின் குழந்தைப் பருவம்.

உலகம் இன்று பல பிரச்சினைகளை எதிர்த்து நிற்கிறது. போர் அச்சம் என்றும் உண்டு. பஞ்ச அச்சம் உளது. தன்னலம், அதிகார ஆசை பதவி வேட்கை, தனியாட்களுக்கிடையிற் பகை, நாடுகளுக்கிடையிற் பகை முதலியன நாளுக்கு நாள் வளர்கின்றன. இவ்வெல்லாத் தீமைகளுக்கும் உண்மையான விளக்கம் யாது?

— சுவாமி சிவானந்தர்

**துன்பத்தை இன்பமாக்குபவன் பெரிய யோகி**

# Great Sayings

1. Hang sorrow, care will kill a cat.
2. They that know no evil will suspect none.
3. Art hath an enemy called ignorance.
4. Who nourishes a lion must obey him.
5. Posterity pays every man his honour.
6. Apes are apes though clothed in scarlet.
7. Better be dumb than superstitious.
8. The right of election is the essence of constitution.
9. A Sound mind in a sound body.
10. No one became bad all at once.
11. No man can be wise on an empty stomach.
12. Our words have wings.
13. Every hero becomes a bore at last.
14. Fear always springs from ignorance.
15. Where liberty dwells, there is my country.

## அப்பிள் பழம்

அந்தக் காலத்தில் அப்பிள் பழம் கப்பல்கள் மூலமாக அவுஸ்திரேலியா, நீயூசிலந்து, மத்தியதரைக் கடல் நாடுகள், இங்கிலாந்து முதலிய தேசங்களிலிருந்து வந்து குவிந்தது. நல்ல மணமும் சுவையும் குணமும் உள்ள அப்பிளைப் பற்றி எங்கள் சித்தர்கள் கூறவில்லை என்றாலும் ஐரோப்பிய வைத்திய நிபுணர்கள் தினந்தோறும் ஒரு அப்பிள் பழம் தின்கின்றவருக்கு வீட்டுக்கு வைத்தியர் தேவையில்லை என்று கூறியிருக்கின்றார்கள்.

அப்பிள் பழத்தில் உள்ள பெக்ரின் சத்து நம்முடம்பில் உள்ள தேவையற்ற, நஞ்சுத்தன்மையுள்ளவற்றை அழிக்கும். பற்களைச் சுத்தஞ் செய்யும், வயிற்றுளைவைத் தணிக்கும். அப்பிளில் உயிர்ச் சத்து C இனம் அதிகமுண்டு. அப்பிளில் நிரம்பிய நீர் உண்டு. எல்லாவற்றிலும் மேலாக அப்பின் பழம் கொழுப்பைக் கரைத்து உடம்பை அளவாக அமைக்கும்.

தமிழ் நாட்டில் அப்பிள் தாராளமாகக் கிடைக்கிறது. பலவிதமான பழங்கள் அங்கே உண்டாகின்றன. திராட்சைப் பழத்தில் நிறைவுகண்ட யாழ்ப்பாணத்தார் அப்பிளையும் உண்டாக்கலாம். உண்டாக்கி விற்று வெற்றி கண்டவர்களுக்கு நன்றி, பாராட்டு உரியனவாகுக. வளர்க உங்கள் முயற்சி.

## ஆலமரம்

ஆலமரம் வேதங்கள், ஆகமங்கள், வேதாங்கங்கள், உபவேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்கள், திருமுறைகள் என்றின்னோரன்ன நூல்களில் போற்றப் பெற்றுள்ளது. அன்று ஆலமர நிழலில் இறைவன் அறம் உரைத்த செய்தி, இராமன் ஆலமர நிழலில் வீரர்களோடு ஆலோசனை செய்த செய்தி என்பன யாவும் நமக்குத் தெரிந்தவையாகும்.

மிகச்சிறிய விதையிலிருந்து உண்டாகி ஆயிரவர்கள் வெயிலுக்கு ஒதுங்கக் கூடியளவு பரப்புக்குப் பரந்து செழித்து வளர்ந்து அடர்ந்து வளந்தருவது ஆல். ஆலமரம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நின்று பயன் தருவதற்கு அதன் விழுதுகள் உதவுகின்ற அமைப்பை நம் இளைஞர்கள் கவனித்தல் வேண்டும். ஆலமரத்தின் அடிமரம் அகன்று பெருத்து வளர்ந்திருந்தாலும் அது முதிர்ச்சியால் உக்கி உலர்ந்து பட்டுப் போனாலும் அதன் விழுதுகள் பென்னம் பெரிய கிளைகளைத் தாங்கி உணவளித்துக் காப்பாற்றுகின்றன. நூற்றுக்கணக்கான விழுதுகள் தாய் மரத்தைத் தாங்கும் இயல்பில் கூட்டுக் குடித்தனம் அமைந்தால் எவ்வளவு குதூகலமாயிருக்கும்.

## வடக்கில் சவுக்கும் சஞ்சீவியும்

எங்கள் வடபிரதேசத்தில் சவுக்கு மரமும் சஞ்சீவி என்னும் யூகலிப்ரஸ் மரமும் நன்றாகவரும் என்பதை நாம் நன்கறிவோம். ஆண்டு தோறும் மில்க்வைற் தொழிலதிபர் இவற்றின் கன்றுகளை ஆயிரமாயிரமாக வழங்கியுள்ளார். அவை போதா.

முன்னர் யாழ்ப்பாணத்து முற்றவெளியெங்கும் மணிக்கூட்டுக் கோபுரத்திலும் உயரமாகச் சவுக்கமரம் வளர்ந்து நின்றன. சவுக்கு விறகுப் பஞ்சத்தைப்போக்கும் என்பதைச் சிங்களச் சகோதரர் நன்கறிவார்கள்.

நாங்கள் வெறுந்தரைகளில் சவுக்கமரத்தையும் சஞ்சீவி மரத்தையும் நூற்றுக்கணக்கில் நாட்டிப் பெருந் தோப்புக்களை உண்டாக்குதல் வேண்டும். அவற்றின் பெரும் பயனை நாளடைவில் நன்கறிந்து கொள்ளலாம்.

சென்னையிலிருந்து கங்கா காவேரி கடுகதிவண்டியில் இரண்டு பகலும் ஓர் இரவும் பிரயாணஞ் செய்தபோது கண்ட அநுபவம் பெரிது. வடக்கே போகும்வழியில் இருமருங்கினும் தேடுவாரற்ற தரையெல்லாம் சவுக்கு மரங்கள் பருவம் பருவமாக வளர்ந்துள்ளன. அடர்த்தியாயும் நாட்டியுள்ளார்கள். சில மிகநேராக வளர்கின்றன. பன்னிரண்டு பதினைந்து அடி உயரமுள்ள மொத்தமான கம்புகள் கொங்கிறிட் போடுமிடங்களில் முண்டுகளாகவும் சாரமரங்களாகவும் பயன்படுகின்றன. மொக்குத்தன்மையாக வளர்வன விறகுக்காக வெட்டப்படுகின்றன. வளரும் போதே நறுக்கப்படும் கிளைகள் உடன் விறகுத்தேவைக்கு ஈடுசெய்கின்றன.

சஞ்சீவி என்னும் யூகலிப்ரஸ் எண்ணெய் வடிக்க உபயோகமாகும். இலைகள் பெருமளவில் வெட்டப்பட்டபின் காய்ந்த கம்புகள் விறகுக்குப் பயன்படுகின்றன.

## வயல் செய்வோருக்கு ஒரு விண்ணப்பம்

எங்கள் பூமி வானம் பார்த்த பூமிதான். என்றாலும் காலத்துக்குக்காலம் எங்கள் வயற் பாத்திகளில் பயறு உளுந்து செய்யலாம். வேண்டுமானால் ஒரு பாத்தியில் ஒரு கிணறு வெட்டினால் பத்துப்பாத்திகளுக்குப் பயன் தரும்.

வடக்கில் நாங்கள் கண்ட அநுபவம் ஒரு பாத்தி அறுவடையாக மறுபாத்தி பயிராகிறது. இன்னுமொரு அதிசயம் அங்கே நெல் அறுவடைக்குச் சில நாள்களுக்கு முன்னர் அவர்கள் பருப்புகள் ஏதாவது விதைக்கிறார்கள்.

தானியங்கள் அறுவடையானபின் பருப்புச் செடி கொடிகள் பயிராகின்றன. அவை அறுவடையானதும் இலை தழைகளை மடக்கி உழுகிறார்கள். பசுமை மிக்குள்ள தழைகள் கால்நடைகளுக்குப் போதிய உணவாகின்றன.

**★ அவாவை அறுத்தால் அமைதி உண்டாகும் ★**

## துவரை

நல்ல இனத்துத் துவரை வரண்ட பிரதேசமெங்கும் நன்றாகப் பயன்தரும். முன்னர் வீட்டுவளவுகளிலேயே இரண்டு மூன்று செடிகள் நன்றாகப் பயன்தந்தன. துவரையிற் பெருஞ்செடிகளும் குற்றுச் செடிகளும் என இரண்டு வகை வடக்கில் வெகுவாகப் பயன்தருகின்றன. பருப்பினத்திற் சிறந்த துவரையை நாம் மீண்டும் பயிரிடப் பழகுதல் வேண்டும். புரதச்சத்து மிகுந்த பருப்பு எங்களுக்கு மிகவும் அவசியம். வடவிந்தியாவில் துவரை வயல்களாகவும் தோட்டங்களாகவும் பயிராகிறது.

## கொண்டல் கடலை

பருப்புக்கடலை எனவும் வழங்கும் கொண்டல் கடலை இறக்குமதியானாற்றான் எம் கண்ணிற் படுகிறது. அது எங்கள் பிரதேசத்துக்கு ஏற்றபயிர். எங்கள் மண்ணில் நன்றாகப் பயன்தரும். நாங்கள் முயற்சியெடுத்தால் அது எமக்கு வாய்ப்பாகும், வாழ்வும் அளிக்கும். வடக்கில் கொண்டல் கடலையை முற்றிக் கலகலக்க முன்னரும் அறுவடை செய்து பச்சை நிறத்திலும் பயன் படுத்துகிறார்கள்.

## செங்கட்டித் தொழில்

தமிழ் நாகரிகத்தின் நினைவுச் சின்னங்களாக நிலவும் பழைய வீடுகள் மனைகள் மாளிகைகள் மண்டபங்கள் கோயில்களில் செங்கட்டிகள், ஓடுகள் ஆயிரமாயிரம் ஆண்டு கழிந்தும் உருப்படியாக உறுதியாக உள்ளன.

சுடுமண் ஓங்கிய மனைகள் மாடங்கள் என்னும்போது களிமண்ணாற் செய்து சூளையிடப்பட்ட கட்டிகளையே குறிப்பர். களிமண் கொண்டு பலவிதமான செங்கட்டிகள், நிலத்துக்கும் சுவருக்கும் பதிக்கும் கற்கள், ஓடுகள் யாவும் சென்னையையடுத்த பிரதேசங்களில் அதிகமாகச் செய்யப் பெறுகின்றன.

### குடிசைத் தொழில்

சென்னைக்கு வடக்கில் நல்ல களிமண்கிடைக்கிறது. குழந்தைகள், பெண்கள் முதியவர்கள்கூட சிரமமின்றி சிறிய கிண்ணங்கள் தட்டுகள் ஆயிரக்கணக்கிற் செய்கிறார்கள். ஒருமுறை சாயா என்னும் தேனீர் பருகிய பின் தூரத்திலே வீசி எறிந்துவிடும் சிறிய கிண்ணங்கள் நாள் தோறும் லட்சக்கணக்கில் செய்யப்பெறுகின்றன.

நெடுஞ்சாலைகளின் ஓரங்கள், சந்திகள், பூங்காக்கள், கடைவீதிகள் எங்கும் தேனீர்ச்சாலைகள் நிரை நிரையாக இருக்கும். அங்கெல்லாம் தேனீக்கள் போல யாத்திரிகளும் பிரயாணிகளும் கடைகளை மொய்த்துத் தேனீர் பருகுவர். அவர்களுக்கெல்லாம் களிமண் கிண்ணங்களே பயன்படுகின்றன. அக்கிண்ணங்கள் மிக மெல்லியன. கண்ணாடிக் கிண்ணம் போலவும் அமைந்துள்ளன.

---

ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொன்றுக்குள் ஊற்றப் படும் எண்ணெயின் இடைவிடாத ஒட்டம் போன்று ஒரே எண்ணத்துடன், ஒரே நோக்கத்துடன் சுரக்கும் கடவுளைப் பற்றிய நிலையான நினைவே பக்தி.

— சுவாமி சிவானந்தர்

## மாட்டுக்கு விளையாடினவன்

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ஆடற்கலைகள் நுண்கலைகள் என்பனவற்றுள் கரகம், காவடி, கம்பங் கூத்து, வில்லுப்பாட்டு, நாட்டியக் குதிரை முதலியனவும் இடம்பெற்று வந்தன. மாடாட்டி என்று பெயர்பெற்ற ஒரு கலையும் நிலவியது. இன்னொன்று மனிதனாய்ப் பிறந்தவன் மாடுபோல் நடக்கவும் ஓடவும் மூசவும் முட்டவும் துள்ளவும் பாயவும் பழகித் தன்வித்தையை வீதியோரங்களிலும் சந்தைகளிலும் காட்டிப் பொதுமக்களை மகிழ்வித்துப் பணந்திரட்டியதாகும்.

ஒருநாள் மாடுபோல விளையாடியவன் ஒருவனைச் சூழப் பெருந்திரளான மக்கள் கூடிநின்றனர். அவனும் அப் பெருந்திரளான மக்கட்கூட்டத்தைக் கண்டு மகிழ்ந்து தான் அரிதில் அப்பியாசஞ் செய்து பழகிய அத்தனை மாட்டு விளையாட்டுகளையும் காண்பித்தான். கண்குளிரப் பார்த்து நின்ற மக்கள் ஐந்து சதம் பத்துச் சதம் இருபத்தைந்து சதம் ஒரு ரூபாவெனப் பணத்தை எறிந்தனர். வித்தையை வியப்போடு பார்த்து நின்ற பிரபு ஒருவர் தாமணிந்திருந்த பட்டுச்சரிகைச் சால்வையை உதறி அவன்மேல் எறிந்தான். அவன் அவருக்கு வணக்கஞ் செலுத்தி மேலும் பல விளையாட்டுக்களை வியர்வையொழுகக் காண்பித்தான்.

இத்தனை விளையாட்டுக்களையும் கூட்டத்தில் ஒருவனாய் ஒதுங்கிநின்று பார்த்த இடையன் ஒருவன் மகிழ்ச்சிபொங்க முன்னேவந்து தனது கக்கத்தில் இடுக்கியிருந்த துவரந் தடியை எடுத்து மாடுபோல் நடந்த விளையாட்டுக்காரனின் அடிவயிற்றில் மெதுவாகக் குத்தினான்.

உடனே மாட்டுக்கு விளையாடியவன் துள்ளிக் குதித்து மாடு கூசிக்காலால் எறியும் முறையில் காலை உதறி மெய் சிலிர்த்து ஒரு புதுமுறையில் ஒட்டங்கலந்த நடை நடந்தான். அதனைக்கண்ட இடையன் இருகைகளாலும் பெருஞ் சத்தம் உண்டாகத் தட்டிச் சீழ்க்கையடித்து ஆகா அற்புதம் என்றுகூறித் தன் தலையில் சுற்றியிருந்த அழுக்கான கந்தையை அவன்மேல் எறிந்தான்.

இடையன் எறிந்த கந்தையை அன்போடு ஏந்திய விளையாட்டுக்காரன் அதனைக் கண்களில் ஒற்றிமகிழ்ந்து, ''இது வன்றோ வரிசை அறிந்து, வித்தையை வியந்து தரப்பெற்ற பரிசு'' என்று வாயார வாழ்த்தி, பிரபு கொடுத்த பட்டுச்சால்வைக்குள் கந்தையை வைத்துச் சுருட்டிக்கொண்டு, இரண்டு காலால் தலைநிமிர்ந்து நடந்து போனான்.

---

### உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. ஒன்றேகால் இருத்தல். 2. ஜோர்ச் வாசிங்ரன் 3. B. B. C. 4. நிலக்கரி. 5. வடகடல், இங்கிலிஸ் கால்வாய் 6. அறுபத்து நான்கு. 7. முட்டை. 8. ஒவல். 9. மெசொப்பொட்டேமியா. 10. சுமேரியர் (தமிழர்) 11. அமெரிக்கா. 12. புறொயிட். 13. நரி. 14. பருத்தி. 15. பட்டு. 16. கம்பளி. 17. மேசைக்கரண்டி. 18. உப்புக்கரண்டி. 19. உணவைச் சேமித்தல். 20. வாற்பேத்தை.

---


★ மனத்தை வென்றவனுக்கு வெளியில் பகைகிடையாது ★

# தருப்பை

புல்லினத்தைச் சேர்ந்த அறுகுபோலத் தருப்பை புனிதமானது. மங்கலகரமானது. தர்ப்பை என்றும் தெற்பை என்றும் வழங்கும் இதற்கு குசம், குமுதம்' குசை, கூச்சம், விசுவாமித்திரம் எனப் பல திருநாமங்கள் வழங்குவதுண்டு.


இந்துமதத்திற் பூசை முதலிய புனித புண்ணிய சற்கருமங்களுக்குப் பெரிதும் பயன்படும் இதனை அருச்சனைப் புல் எனவும் வழங்குவர். கும்பம், விம்பம், தம்பம் முதலிய வழிபாட்டிடங்களை மங்கலகரமாக்கும் தருப்பைப் புல் சங்கற்பம் செய்வோர் வலக்கை நான்காம் விரலில் பவித்திரமாகவும் அணிவதற்குப் பயன்தருகிறது. அன்றி இடுப்பிற் சொருகவும் ஆசனமாகவும் உதவுகிறது. இவ்வகையான உபயோகங்களினுல் அது உடம்புக்குப் பாதுகாப்பளிக்கும் ஒருவகை ரட்சை என்னும் காப்பாகவமைவதோடு உடம்பில் புனிதத்தையும் தெய்வக் கனலையும் பாய்ச்சிவிடுகிறது. சகலவிதமான தோஷங்களையும் அது நீக்கிவிடுகிறது. யாகாக்கினியில் வெந்த தருப்பைச் சாம்பலில் நெய்விட்டுத் திலகமாக்கி அணிதல் தனிப்பட்ட சுபீட்சம். தர்ப்பையோடு நெருங்கிய தொடர்புகொண்டுள்ள பிராமணர்கள் குருக்கள்மார் மிகவும் பரிசுத்தராயிருத்தல் வேண்டும்.

சமயக் கிரியைகள், திருக்கோயிற் கிரியைகள் முதலியவற்றில் தனியிடம் வகிக்கும் தருப்பை வைத்தியத் துறையிலும் பெரும் பயனளிக்கிறது. விடம், கபம், சுரம் முதலியவற்றை நீக்குவதற்குத் தருப்பை உபயோகமாகிறது. இன்னும் தாகம், நமைச்சல், முதலியனவும் தருப்பைக் கசாயத்தால் நீங்கும்.



BE MODERATE

Eat less, drink more.
Play less, study more.
Sit less, walk more.
Chat less, learn more.
Sleep less, play more.
Take less, Give more.
Speak less, act more.
Weep not, laugh more.
Be good, Do good.
Be wise, Be cheerful.
Smile, Dance, Pray,
Serve, Love, Give,
Control, Purify, Meditate, Realise.



## பஞ்சதந்திரம்

சாவு தருவன – யானை தொட்டாலும், பாம்பு மூச்சு விட்டாலும், மன்னன் சிரித்தாலும், துஷ்டன் கௌரவித்தாலும் சாவு.

ஒருவன் தரித்திரனுயிருந்தாலும், தன் நாட்டில் தன் ஊரில், தன் வீட்டில் பெறுகின்ற இன்பத்தைப் போல் சுவர்க்கத்தைச் சுற்றிவந்தாலும் பெறுவது கிடையாது.

தவக்கோலத்தில் இருந்தாலும் எல்லாரையும் நம்பலாகாது. புண்ணியஸ்தலங்களில் கபட சந்நியாசிகள் காணப்படுவதும் உண்டு.

மானத்தையும் மறைக்காமல், ஈயையும் கொசுவையும் கலைக்காமல் இருக்கிற நாய் வால்மாதிரி, அறவழியில் நிற்காத கல்வியும் வீணே.

தானியங்களில் பதர், பறவைகளில் வௌவால், பூச்சிகளில் கொசு இவற்றுக்குத் தருமம் தெரியாது.

மரத்தைவிடப் பூவும் பழமும் சிறந்தவை. தயிரைவிட நெய் சிறந்தது. பிண்ணுக்கைவிட எண்ணெய் சிறந்தது. மனிதனைவிடத் தருமம் சிறந்தது.

புண்ணியந் தேடுவதானுல் பிறர்க்கு நன்மை செய்தல் வேண்டும்.

## ஸ்ரீ சக்கரத்தில் ஒரு சூக்குமம்

உலகம் உருண்டையானது என்றும், அணு என்பது ஒன்று அசைவு ஆட்டத்துக்குக் காரணமானது என்றும், அணுவைப் பிளக்கலாம் என்றும் மேற்கு நாடுகளில் விஞ்ஞானிகள் உணர்வதற்கு முன்னமே பாரத நாட்டுப் பழம் பெரும் மெய்ஞ்ஞானிகள் இவற்றை விளக்கியுள்ளார்கள்.

ஸ்ரீ சக்கரத்தின் அமைப்பில் அணுவின் பிளப்புக்களான எலக்ட்ரோன், புரோட்டோன் முதலானவை சுழலும் இயல்பைக் கோடுகளும் முக்கோணங்களும் குறிக்கின்றன. சக்கரத்தின் மையப் புள்ளி சக்தியின் இருப்பிடம். சக்தியின் இயக்கத்தால் உலகின் ஆக்கங்கள் தேக்கங்கள் யாவும் உண்டாகின்றன உருவாகின்றன. சிவபெருமான் சக்தியை விட்டு நீங்காதவர். சிவபெருமானின் அசைவே சக்தி.

★ எண்ணமே ஒருவனைப் படிப்படியாக உருவாக்குகிறது ★



# ஔவை அருந்தமிழ்

★

## மூந்நாட்டு வளங் குறித்துப் பாடியது

முற்காலத்திலே தமிழ்நாடு, சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என முப்பெரும் பிரிவுள்ளதாய் இருந்தது. இப்பிரிவுகளை முறையே சேரர், சோழர், பாண்டியர் என்னும் குலமன்னர்கள் பரம்பரையாக அரசாண்டு வந்தார்கள். மூன்று நாடுகளும் அக்காலத்தில் ஒவ்வொரு வகையில் வளம் பெற்றிருந்தன. அவற்றின் சிறப்புக்களை ஒரு சமயம் ஔவையார் ஒரு பாடலில் சுருக்கமாகப் பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்.

மலைநாடு என்று வழங்கும் சேரநாட்டில் நல்ல காடுகள் உள்ளன. காடுபடுதிரவியங்களிற் சிறந்த யானைக் கூட்டம் அங்கே மிகுதியாகவுண்டு. மாட்சிமை மிக்க சோழநாட்டில் காவிரி நீர் வசதியுண்டு. அதனால் அங்கேயுள்ள மருத நிலத்தில் ஏராளமாக நெல் விளைவதால் அங்குச் சோற்றுக்குக் குறைவில்லை. பூழியர் எனவும் வழங்கும் பாண்டியரின் அழகிய தென்னாடு என்னும் பாண்டி நாட்டினை அடுத்துள்ள கடலில் கடல்படுதிரவியமான நல்ல முத்துக்கள் கிடைத்தன. இவ்விதம் பெருமை மிக்க முந்நாடுகளோடு சேர்ந்துள்ள தொண்டை மண்டலம் என்னும் நிலப் பரப்பில் தெளிந்த நீர்ப்பாசன வசதியுள்ள வயல்கள் உண்டு. அங்கே அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை தெளிந்த மனத்தினையுடைய சான்றோர்கள் வாழ்கின்றார்கள்.

வேழம் உடைத்து மலைநாடு, மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப் — பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்
நன்னாடு சான்றோர் உடைத்து. [தொண்டை

## இமயமலை வளர்கிறது !

மாலோறி ஏர்வின் காலத்து இமயமலையின் உயரம் வேறு, ஹில்லாரி ரென்சிங் காலத்து இமயத்து உயரம் வேறு, இன்றைய இமயத்தின் உயரம் வேறு. இமயமலை ஆண்டு தோறும் எட்டரை அடி உயரம் வளர்கிறது.

## இராமனின் புகழ்

இந்தியாவின் இணையற்ற இயற்கை விஞ்ஞானியாய C. V. இராமன் அவர்களின் புகழ் உலகத்துக்குரிய புகழ். விஞ்ஞானவுலகில் மலர்ச்சிகரமான புதிய திருப்பங்களை அவர் உண்டாக்கியுள்ளார். அவரைக் கௌரவிப்போமாக. அவர் பெயர் சந்திரவேங்கடராமன் என்பதாகும்.


மில்க்வைற் தயாரிப்புகளில் உங்களுக்குச்

★ சிறந்தது
★ சிக்கனமானது
★ நுரைவளம் உள்ளது
★ அழுக்கை உடனடியாகப் போக்குவது
★ துண்டு துண்டுகளாக வெட்டி உங்கள் தேவைக்கு உபயோகிக்கக்கூடியது




மில்க்வைற் பார் சோப்


## வங்கியாளர் நரசிம்ஹலு தம்பதிகள் விருந்து வைபவம்

சென்னை ஸ்ரீராம் குடியேற்றப் பகுதியில் நரசிம்ஹலு என்னும் அரச வங்கியாளர் இல்லறம் நடத்துகிறார். இல்லத்தரசி இந்திராவும் செல்வக் குழந்தை ஞானப்பிரியாவும் கலகலப்பாகப் பேசுபவர்கள். அவர்களுடன் நிரந்தர விருந்தினராய் வாழ்ந்து சென்னையில் பொறியியல் படிப்பவர் மில்க்வைற் தொழிலதிபரின் தம்பியார் வவநாதனின் மைந்தன் கருணாகரன்.

உங்கள் பெரியப்பாவும் பெரியம்மாவும் காசிக்குப் போய் வந்தவர்களாக்கும். நாங்கள் அவர்களை வீழ்ந்து வணங்குதல் வேண்டும். விருந்துபசாரஞ்செய்து சிறப்பிக்க வேண்டும் என்று இந்து நாகரிகம் தழைக்க விருந்து செய்தார்கள். சென்னையை விட்டுப் புறப்பட்ட போதும், வழிப் பயணத்திற்குப் பட்சணங்கள் தயாரித்து வழியனுப்பினார்கள். வளர்க இவர்தம் இல்லறம்.

மனம் களைத்தபோது மனக்குவிவு செய்யாதீர்கள். அதற்குச் சிறு ஆறுதல் அளிக்குக.

— சுவாமி சிவானந்தர்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1-5-82.